தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குரின் செயல்முறைகள், சென்னை – 06.

ந.க.எண். 71/இ1/2021 நாள். 15.07.2021.

-----

பொருள் : மெட்ரிகுலேசன் பள்ளிகள் – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 - நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான குழந்தைகளுக்கு 25% இட ஒதுக்கீடு - 2020 – 2021 ஆம் கல்வியாண்டிற்கான ஒரு மாணவருக்கு உண்டாகும் செலவினம் (Per child Cost) - அரசாணை வெளியிடப்பட்டது - தக்க நடவடிக்கைக்காக நகல் அனுப்புதல் – சார்ந்து.

பார்வை :

1. இவ்வியக்கக கடித ந.க.எண். 71/ இ1/2021 நாள். 15.04.2021.
2. அரசாணை (எம்.எஸ்) எண். 104 பள்ளிக் கல்வி (எம்.எஸ்) துறை நாள். 09.07.2021.

-------

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 12(1) (சி) மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 விதி(8)ன்படியும், 2020 – 2021 ஆம் கல்வியாண்டில் 25 % இட ஒதுக்கீட்டில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகள் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்கான கல்விக் கட்டணம் பள்ளிகளுக்கு ஈடு செய்யப்பட வேண்டும்.

பார்வைய (2) -ல் காண் அரசாணையின்படி, 2020 – 2021 ஆம் கல்வியாண்டிற்கு அரசுப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவருக்கு ஆகும் செலவினம் சார்ந்து (Perchild Cost) அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 விதி (9) ன் படி பள்ளிகளுக்கு கல்விக் கட்டணம் ஈடுசெய்வதற்கு ஏதுவாக, கேட்பு படிவங்களை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

த.பி.பா

மேற்காண் விவரங்களின்படி EMIS இணையதளத்தில் ஒவ்வொரு பள்ளியும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் பிரிவு 12 (1) (சி) யின் கீழ் பயிலும் மாணாக்கர்களின் விவரங்களை சரியாக புதுப்பித்து (Update) வைத்திருக்க வேண்டும். வங்கிக் கணக்கு விவரங்களையும் (Bank details) சரிபார்த்து வைத்திருக்க வேண்டும்.

பார்வை (2) – ல் காண் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகையை, தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தோடு ஒப்பிட்டு எந்த தொகை குறைவாக உள்ளதோ, அத்தொகை EMIS இணையதளத்தில் தானியங்கி முறையில் ( Automatic Generate ) பதிவேற்றம் செய்து கொள்ளும். அவற்றை பதிவிறக்கம் செய்து முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பத்துடன் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கேட்புப் படிவங்கள் தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழுவால் பள்ளிகளுக்கு கட்டண நிர்ணயம் செய்யப்படும் ஆணை மற்றும் குழுசரிபார்ப்பு படிவங்கள் முதன்மைக் கல்வி அலுவலர்களால் கையொப்பமிடப்பட்டு, மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கான விவரங்களை தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கும், மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான விவரங்களை இவ்வியக்ககத்திற்கும் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

நிதி சார்ந்த விவரங்கள் ஆதலால் எவ்விதத்தவறும் நிகழாதவாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கீழ்க்கண்ட விவரங்கள் மீது நேரடிக் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. EMIS இணையதளத்தில் RTE திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட அனைத்து மாணாக்கர் சார்ந்த பதிவுகள் மற்றும் வங்கிக் கணக்கு சார்ந்த பதிவுகள் ( Bank details) கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமெ.
2. எந்த ஒரு மாணவரோ அல்லது பள்ளியோ விடுபடாமல் இருக்க வேண்டும்.
3. பள்ளிகள் விடுபட்டதாகவோ, மாணாக்கர் விடுபட்டதாகவோ தெரிவித்துப் பின்னர் கோரிக்கை ஏதும் இவ்வியக்ககத்திற்கு அனுப்பப்படுதல் கூடாது. இதில் குறைபாடுகள் இருந்தால் தாங்களே முழுப் பொறுப்பேற்க நேரிடும்.

15/7/2021

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

15.7.2021

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுலர்கள்.

நகல்

1. மாநில திட்ட இயக்குநர் (பணிவுடன் அனுப்பலாகிறது).
2. பள்ளிக் கல்வி ஆணையர் (பணிவுடன் அனுப்பலாகிறது).
3. தொடக்கக் கல்வி இயக்குநர் (தொடர் நடவடிக்கைக்காகக் கனிவுடன் அனுப்பலாகிறது).